சிவமயம்

# Saiva Maha Sabai(Western Australia) Inc.

## சைவ மகா சபை (மேற்கு அவுஸ்திரேலியா)

## SRI BALAMURUGAN TEMPLE, PERTH

## அருள் மிகு ஸ்ரீ பாலமுருகன் கோவில், பேர்த்

Web:www. perthmurugan.org.au    Tel: 08 94379995    E mail: murugan@perthmurugan.org.au

# 07.02.2020

# Maha Kumbabhisheham Consecration Ceremony

# மகா கும்பாபிஷேக விஞ்ஞாபன விழா

## திருக்குட நன்னீராட்டுப் பெருஞ்சாந்திப் பெருவிழா



திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.



உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!



பாற்கடல் தன்னை அழைத்தவனே
பாரொடு விண்ணாய்ப் பரந்தவனே
நூற்பொருள் தன்னை விரித்தோனே
நுண்ணிடை யாள்தன் இடத்தவனே!

குகநேயச் செல்வர்களே!

ஸ்ரீமத் அகண்டபரிபூரண சச்சிதானந்த பரப்பிரம்மமாய், அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகராய், ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெரும் ஜோதியாய், சர்வாபீஷ்டவரதராய் விளங்குகின்ற முழுமுதற் கடவுளால் படைக்கப்பட்ட இப்பூவுலகின் கண்ணே! வரலாற்றுப் பெருமையுடைய அருமைபெருமை மிகுந்த “அவுஸ்திரேலியா” கண்டத்திலே,மேற்கு மாநிலமாக விளங்கும் “பேர்த்” மாநகரிலே! மலைகளும், வாவிகளும், நதிகளும், பசுமையான வயல்களும் நிறைந்து நானிலமும் நயமுடன் சூழ்ந்த “மண்டோகிளப்” என்னும் பகுதியிலே! பார்த்தோர் மனம் குளிர்ந்து பரவசமாகும் மரங்களும் பூஞ்செடிகளும் நிறைந்து “பசும்சோலை” எனத் தோற்றும் “கந்தகோட்டம்” என்னும் திவ்விய பதியிலேயுள்ள புண்ணிய கேத்திரத்திலே! கோலமா மஞ்ஞை தன்னில் குலவிடும் குமரன், குன்று தோர் ஆடும் குகன், ஈசனுடன் ஞானமொழிபேசிய சுவாமிநாதகுருபரன், பிரணவசொரூப மயூரவாகனன், கலியுகவரதன் எனப் போற்றப்படும் ஸ்ரீமுருகப் பெருமான் தம்மை வழிபடும் அடியார்களுக்குத் திருவருள் பொழிய வேண்டும் என்ற பெருங்கருணையினால் “ஸ்ரீ பாலமுருகன்” திருவுருவம் தாங்கி வீற்றிருந்து அருளாட்சி புரியும் இடம் அருள்மிகு “பேர்த் ஸ்ரீபாலமுருகன்” திருக்கோவிலாகும். இப்பொழுது இக்கோவில் திருப்பணிகள் பூர்த்தியாகி ஆகம நெறி தழுவி நடைபெற வேண்டிய மஹா கும்பாபிஷேக விழாவானது!

நிகழும் மங்களகரமான சுபஸ்ரீ விகாரி வருஷம் உத்தமமான உத்தராயணம் முன்பனி குளிர்ந்த ஹேமந்தருது, மகர மாதம் (தை மாதம்) இருபத்து நான்காம் நாள் (24ம் திகதி) சுபரூப சுக்கிர வாரம்(07.02.2020 வெள்ளிக்கிழமை) சுபகரமான சுக்கில ப்திரயோதசித்திதியும் புனிதமான புநர்பூச நடசத்திரமும் சிறப்புறு சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 8 மணி முதல் 9 மணி 45 நிமிஷத்திற்குள் கும்ப லக்ன சுபமுகூர்த்த சுப வேளையில்,

“ஸ்ரீபாலமுருகப் பெருமானுக்கும்”, ஆலய பரிவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீபாலசெல்வவிநாயகப்பெருமான், ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரப்பெருமான், ஸ்ரீசுவர்ணாம்பிகை அம்பாள், ஸ்ரீமஹா வல்லி கெஜாவல்லி சமேத ஸ்ரீசெல்வ முத்துக்குமார சுவாமிப் பெருமான், ஸ்ரீதேவ-பூதேவி சமேத ஸ்ரீமன்நாராயணப்பெருமான், ஸ்ரீஐயப்பசுவாமி, நூதன ஆத்மலிங்கப்பெருமான், ஸ்ரீதுர்க்கையம்பாள், ஸ்ரீஞானவைரவப் பெருமான், ஸ்ரீநவக்கிரகமூர்த்திகள் மற்றும் பரிவார மூர்த்திகள், உற்சவமூர்த்திகள், மூலாதாரவிநாயகப்பெருமான், மயூரம், பலிபீடம் ஆகிய சகல மூர்த்திகளுக்கும் “பெருஞ்சாந்தி” என்றும் “திருக்குட நன்னீராட்டு விழா” என்றும் விதந்து கூறப்படும் மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு திருவருள் கை கூடியுள்ளது. அடியார்கள் யாவரும் இக்கும்பாபிஷேகவிழாவிலும் அதற்கு முன்பும்பின்பும் நடைபெறுகின்ற கிரியா காலங்களிலும் ஆலயத்திற்கு வருகை தந்து சரியைத்தொண்டுகள் புரிந்து கிரியைகளைத்தரிசித்து யோகங்கள் பல பெற்று ஞானாநந்தப் பெருவாழ்வுபெற எம்பெருமானுடைய திருவடிகளைப் போற்றிப் பணிந்து சகல சௌபாக்கிய சர்வமங்களப் பிரசாதம் பெற்றுய்வீர்களாக!

**05-02-2020 Wednesday** 9.00am to 10.00am **Devotees are allowed to place Navarathina stones**
**சுவாமிகள் பீடத்தில் அடியார்கள் நவரத்தினம் இடுதல்**

**Oil application to deities by devotees அடியார்கள் எண்ணைக்காப்பு சாத்துதல்**

| | |
|---|---|
| **05-02-2020 Wednesday** | 7.00pm to 10.00pm |
| **06-02-2020 Thursday** | 7.00am to 12.00Noon |

உபயங்கள் செய்ய விரும்புவோர் மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
To participate the pooja Please contact us

President 0410 443 244    Secretary 0423 304334

# கிரியா கால நிகழ்வுகள்

**மங்களகரமான விகாரி வருஷம் தை மாதம் 16ம் நாள் குருவாரம் (30.01.2020 வியாழக்கிழமை)**

**காலை 7.00 மணி** - ஆலய நிர்வாகத்தினர் மங்கள உபசார சகிதம் சிவாச்சார்யர் அழைப்பிற்கு வருகை.

**காலை 7.35 மணி** - சிவாச்சார்யார்கள் ஆலயப்பிரவேசம். சிற்பிஉபசாரம். கும்பாபிஷேக பத்திரிகை படித்தல். பூர்வாங்கக் கிரிகைகளுடன் மஹாகணபதிஹோமம் ஆராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்

**மாலை7.00 மணி** - ஸ்ரீதருணகணபதி ஆராதனை,புண்ணியாகவாசனம், கிராமசாந்தி. ஸ்ரீவைரவப்பெருமான் ஆராதனை. திருவருட் பிரசாதம்வழங்குதல்.

**தை மாதம் 17ம் நாள் சுக்கிரவாரம் (31.01.2020 வெள்ளிக்கிழமை)**

**காலை 9.00 மணி** - ஸ்ரீபக்கிகணபதி வழிபாடு, புண்ணியாகவாசனம், நவக்கிரஹஹோமம், அபிஷேகம், ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**மாலை 7.00 மணி** - ஸ்ரீவீரகணபதி பூஜை, புண்ணியாகவாசனம்,
**8.00 மணி** -நூதனமூர்த்தி கிராமப்பிரதச்சணம். பிரவேசபலி, ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**தை மாதம் 18ம் நாள் ஸ்திரவாரம் (01.02.2020 சனிக்கிழமை)**

**காலை 9.00 மணி**- ஸ்ரீசக்திகணபதிவழிபாடு, புண்ணியாகவாசனம். நூதனமூர்த்தி தான்யாதி-வாசம் (நெல்லுப் போடுதல்),கண் திறத்தல், தண்ணீர் ஊற்றுதல் ,ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**மாலை 7.00 மணி**- ஸ்ரீபிரம்மகணபதி பூஜை, புண்ணியாகவாசனம், யந்திர பூஜை பூர்த்தி, ரட்சோக்ன ஹோமம், திசாஹோமம், சயணாரோஹணம். ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**தை மாதம் 19ம் நாள் பாநுவாரம் (02.02.2020 ஞாயிற்றுக்கிழமை )**

**காலை9.00 மணி** - ஸ்ரீபிங்களகணபதிஆராதனை, புண்ணியாகவாசனம், சாந்திஹோமம், மூர்த்திஹோமம், சம்ஹிதா ஹோமம். ஆராதனை , திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**மாலை 7.00 மணி** -ஸ்ரீஉத்திஷ்டகணபதி வழிபாடு புண்ணியாகவாசனம், வாஸ்து சாந்தி, ஹோமம், கோவாசம் (பசுபிரவேசம்), ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**தை மாதம் 20ம் நாள் ஸோமவாரம் (03.02.2020 திங்கட்கிழமை )**

**காலை 9.00 மணி**- ஸ்ரீவிநாயககணபதிபூஜை, புண்ணியாகவாசனம், சிவாச்சார்யார்களுக்கு பஞ்சோஉபசாரம், கெங்கா பூஜை, சூரிய பூஜை.ஆராதனை. திருவருட் பிரசாதம் வழங்குதல்

**மாலை 6.00 மணி** -ஸ்ரீசிப்ரகணபதிவழிபாடு, புண்ணியாகவாசனம், புனிதமண் எடுத்தல், நவதானியம் இடுதல் காப்பு கட்டுதல், **பிரசன்ன அபிஷேகபூஜை, கும்ப அலங்காரம், கலாகர்சணம்,சுவாமிகள் எடுத்தல்**,முதலாவது கால யாக பூஜை, மூலமந்திர ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**தை மாதம் 21ம் நாள் மங்களவாரம் (04.02.2020 செவ்வாய்கிழமை)**

**காலை 9.00 மணி** -ஸ்ரீஹேரம்பகணபதிபூஜை, புண்ணியாகவாசனம், இரண்டாவது கால யாக பூஜை, ஹோமம்,பூர்ணாகுதி, தீபாராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**மாலை 7.00 மணி** -ஸ்ரீலக்சுமீகணபதி ஆராதனை, புண்ணியாகவாசனம், மூன்றாவது கால யாக பூஜை. ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

## தை மாதம் 22ம் நாள் ஸௌமியவாரம் (05.02.2020 புதன்கிழமை)

**காலை 6.00 மணி** - ஸ்ரீமஹா கணபதி பூஜைபுண்ணியாகவாசனம்,
**காலை 8.05 மணி** - ஸ்துாபிகளில் கலசம்வைத்தல், சுமங்கலிபூஜை, விளக்குப்பூஜை,
**காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை** - சுவாமிகளின் பீடத்தில் அடியார்கள் தங்கம், நவரத்தினம் ஆகியன சமர்ப்பித்தல்.

**காலை 10.15 மணி முதல் 11.40 மணிக்குள்** -யந்திரம் வைத்தல், சுவாமிகள் ஸ்தாபனம், மருந்து சாத்தல் நாலாவது கால யாக பூஜை,ஹோமம்,பூர்ணாகுதி, தீபாராதனை,திருவருட் பிரசாதம் வழங்குதல்.

### அடியார்கள் எண்ணெய் சாத்தலாம்.

05.02.2020 புதன்கிழமை மாலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணிவரையும்
06.02.2020 வியாழக்கிழமை காலை 7.00 மணி முதல் பகல் 12.00 மணி வரையும்

**மாலை 7.00 மணி** - ஸ்ரீவிக்னகணபதிபூஜை புண்ணியாகவாசனம் ஐந்தாவது காலயாக பூஜை, பூர்ணாகுதி, தீபாராதனை,'மஹாகும்பாபிஷேக மலர் வெளியீடு' திருவருட் பிரசாதம் வழங்குதல்.

## தை மாதம் 23ம் நாள் குருவாரம் (06.02.2020 வியாழக்கிழமை)

**காலை 9.00 மணி** - ஸ்ரீநிர்த்த கணபதி பூஜை, புண்ணியாகவாசனம், ஆலயசரவணப்பொய்கை தீர்த்தக் கரையில் விசேஷசாந்தி, ஆறாவது கால யாகபூஜை, விசேஷ திரவியஹோமம், பூர்ணாகுதி,தீபாராதனை, திருவருட் பிரசாதம் வழங்குதல்.

**மாலை 5.00 மணி** - பிம்பசுத்திகும்ப பூஜைகள், ஏழாவது கால யாக பூஜை, ஹோமம். பூர்ணாகுதி, தீபாராதனை, சிவாச்சார்யார்களுக்கு உபசாரம். திருவருட் பிரசாதம் வழங்குதல்.

## தை மாதம் 24ம் நாள் சுக்கிரவாரம் (07.02.2020 வெள்ளிக்கிழமை)

**அதிகாலை 5.00 மணி**- ஸ்ரீசங்கடஹர கணபதி ஆராதனை,புண்ணியாகவாசனம், எட்டாவது கால யாகபூஜை, ஹோமம், மஹா பூர்ணாகுதி.

**காலை 7.30 மணி** - இராஜகோபுர. ஸ்தூபி கும்பங்கள் விமானஸ்தூபி கும்பங்கள் புறப்பாடு - வீதிவலம்.

**காலை 8.10 மணி** - இராஜகோபுர சுந்தர விமான சிகர கலசங்கள் கும்பாபிஷேகம்.

**காலை 8.15 மணி** - பிரதான சுந்தரவிமான ஸ்தூபி கலச, பரிவார ஆலய ஸ்தூபி கலசங்கள் கும்பாபிஷேகம்.

**காலை 8.45 மணி** - "ஸ்ரீபாலமுருகப் பெருமானுக்கு" மஹா கும்பாபிஷேகம். பரிவாரமூர்த்திகள்" கும்பாபிஷேகம். குருநமஸ்காரம், ஆசீர்வாதம். அன்னதானம் வழங்குதல்

**மாலை 6.00 மணி** - சாயங்காலப்பூஜை, திருக்கல்யாணம், திருஊஞ்சல், பாராட்டுகள், கௌரவிப்புகள். சுவாமிதிருவீதியுலா. குருக்கள் ஆசீர்வாதம். திருவருட்பிரசாதம் வழங்குதல்.

## தை மாதம் 25ம் நாள் ஸ்திரவாரம் (08.02.2020 சனிக்கிழமை)

**காலை 7.30 மணி** - காலைப் பூஜை,

**மாலை 6.00 மணி** - **மண்டலாபிஷேகம் ஆரம்பம்.**

குறிப்பு:
**Mandala Abhisheham Starting மண்டல அபிஷேகம்** ஆரம்பம **08-02-2020 Saturday**
**Mandala Abhisheham Poorthy மண்டல அபிஷேகம்** பூர்த்தி **26-03-2020 Thursday**

**ALL DEVOTEES ARE WELCOME TO TAKE PART IN THIS ALL DEVOTIONAL ACTIVITIES**

அனைத்து அடியார்களையும் இவ்வைபவங்களில் கலந்துகொள்ளுமாறு
அன்புடன் வேண்டுகின்றோம்

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## பிரதிஷ்டா சிவாச்சார்யார்கள்
மஹாகும்பாபிஷேகத்திற்கு அருள் ஆசிவழங்குபவர்கள்

### பிரதிஷ்டா பிரதம சிவாச்சார்யார்
சிவாகம கிரியாபூஷணம், சிவாகம கிரியாதத்துவநிதி,
பிரதிஷ்டா கிரியாசிரோமணி, ஸ்கந்தாராதன ஸம்கிரகர்,
பிரதிஷ்டாவித்வ, சிரோமணி, ஈசாநசிவாச்சார்யார்
சிவஸ்ரீ சபாரத்தின பரமேஸ்வரக்குருக்கள் அவர்கள்
(ஸ்ரீலங்கா-உரும்பராய் ஸ்ரீகருணாகரப்பிள்ளையார் கோவில் - ஆதீனகர்த்தா பரம்பரை)
பிரதமகுருக்கள் - ஸ்ரீகந்தசுவாமி கோவில், ஸ்கொற் வீதி - கோலாலம்பூர் - மலேசியா

### சர்வசாதகாச்சார்யார்
“வேதாகம வித்யா பூஷணம்” சர்வசாதகதிலதம்
சிவஸ்ரீ விஸ்வ சோமசுந்தரக்குருக்கள் அவர்கள்
(விஸ்வநாராயணசர்மா) ஆகம ஆலோசகர், வேத ஆகம ஆசிரியர்
கொழும்பு - ஸ்ரீலங்கா.

### ஆலய சிவாச்சார்யார்கள்
**சிவாகம பிரவீனர்**
சிவஸ்ரீ வெங்கடேஸ்வர சிவசுப்பிரமணியகுருக்கள் அவர்கள் - பேர்த்
**சிவாகமரத்தினா**
சிவஸ்ரீ கணேஷ் நாகேஸ்வரக்குருக்கள் அவர்கள் - பேர்த்
**சிவாகமரத்தினம்**
சிவஸ்ரீ நாராயண கிருஸ்ணமோகன் சிவாச்சாரியார் - இலங்கை

### சிவாச்சார்யார்கள்
சிவஸ்ரீ குமார சரவணபவக்குருக்கள் அவர்கள் - இலங்கை
சிவஸ்ரீ சோமநிர்மலேஸ்வரக்குருக்கள் அவர்கள் - சிட்னி
கயிலைஸ்ரீ சிவஸ்ரீ முத்துப்பட்டர் சுப்பாபட்டர் - கன்பரா
சிவஸ்ரீ சங்கர சிவாச்சாரியார் – மதுரை
சிவஸ்ரீ M.கணேச பட்டர் - மதுரை
சிவஸ்ரீ அந்தமான் கிர்த்தவாசன் விஜயனகுருக்கள் - மதுரை
சிவஸ்ரீ விஜயகுமாரன் ராமநாதக்குருக்கள் – மெல்பேண்
சிவஸ்ரீ க.கார்த்திகேய சிவம் – மதுரை
சிவஸ்ரீ உக்கிரபாண்டியன் சிவாச்சாரியார் – மதுரை

ஷாஸ்திரி லக்ஸ்மன் ஐயங்கார்

ஓதவார்
வயித்தியநாதன் பளனிவேல்

### ஆலய புனர் நிர்மாணம் 2020
விஸ்வப்பிரமஸ்ரீ ஸ்தபதியார் - நாகராஜன்

மங்கள இசை

பத்மபூஷணம் **ரஜீந்திரன் பிச்சைஅப்பா** – நாதஸ்வரம் (இலங்கை)
பத்மபூஷணம் **துளசிபரன் சிவபாலசுப்ரமணியம்** – தவில்

பத்மபூஷணம் **சிவசாமி ஜானகிராமன்** – நாதஸ்வரம் (இந்தியா)
பத்மபூஷணம் **பத்மநாதன் பாக்கியநாதன்** – தவில்

முகூர்த்த நிர்ணயம் - வாக்கிய பஞ்சாங்கம் - யாழ்ப்பாணம்

“வேலுண்டு வினையில்லை மயிலுண்டு பயமில்லை”

“மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”